மாலை முரசு

பக்கங்கள் 21+ 03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 10 சனிக்கிழமை 26.07.2024 | அதிர்வு 357

## செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளை நேரில் பார்வையிட்ட கஜேந்திரகுமார்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளைத் தமிழ்த் தேசிய மக்கள் 06

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# தமிழின அழிப்புக்கு சர்வதேச நீதி கோரி தமிழர் தாயகத்தில் பெரும் போராட்டம்




[எஸ்.நிதர்ஷன், கி.வசந்தன், பா.சதீசன், ஏ.எச். ஹஸ்பர்]

ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இன அழிப்புக்குச் சர்வதேச நீதிப் பொறி முறை வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களி லும் இன்று கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 06






# இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி கோரி யாழ். செம்மணியில் உறவுகள் போராட்டம்

இனப்படுகொலைக்குச் சர்வதேச நீதி கோரி வடக்கு – கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், செம்மணி வளைவுப் பகுதியில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இன அழிப்புக்குப் பன்னாட்டு சுதந்திர நீதிப் பொறிமுறை ஊடாக மட்டும் நீதியை வேண்டி நிற்கின்றோம் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)














# இன அழிப்புக்குச் சர்வதேச நீதி கோரி வவுனியாவில் இன்று திரண்ட உறவுகள்

ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இன அழிப்புக்குச் சர்வதேச நீதிப் பொறிமுறை வேண்டும் என்பதை வலியுறுத்தி வவுனியா புதிய பஸ் நிலையப் பகுதிக்கு முன்பாக இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(படங்கள்:- கி.வசந்தன்)














# சர்வதேச நீதி கோரி முல்லைத்தீவில் திரண்ட உறவுகள்

நீண்ட காலமாகத் தமிழ் மக்கள் மீது திட்டமிடப்பட்ட வகையில் நடத்தப்பட்டு வரும் இன அழிப்புக்குச் சர்வதேச நீதி கோரிய போராட்டம் இன்று முல்லைத்தீவில் இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை தபிசாளர் லோகேஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஜுட்சன், வடக்கு – கிழக்கு சமூக இயக்கத்தின் ஒருங்கிணைப் பாளர் அன்புமணி லவகுசராசா, மீனவ ஒத்துழைப்பு இயக் கத்தின் உறுப்பினர்கள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர், சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(படங்கள்:- பா.சதீசன்)





# சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி திருகோணமலையில் உறவுகள் கவனவீர்ப்பு

வடக்கு - கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி இன்று சனிக்கிழமை திருகோணமலை சிவன் கோயில் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் பங்கேற்றவர்கள் தமிழின அழிப்புக்குச் சர்வதேச நீதி வேண்டும் எனக் கோரும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

(படங்கள்:- ஏ.எச். ஹஸ்பர்)





# புதிய அரசமைப்புக்கான வேலைத்திட்டம் ஆரம்பம்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

"புதிய அரசமைப்புக்கான ஆரம்ப கட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எமது ஆட்சிக் காலத்துக்குள் புதிய அரசமைப்பு திருத்தங்களை மேற்கொள்வோம்."

– இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில், புதிய அரசமைப்பு திருத்தம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

"புதிய அரசமைப்பு ஒன்று நாட்டுக்குத் தேவையாகும். அது இந்த நாட்டின் அடிப்படைச் சட்டமாகும். அதனால் அதில் திருத்தம் மேற்கொள்ளும்போது அது தொடர்பில் ஆராயாமல், விசேட நிபுணர்களுடன் கலந்துரையாடாமல், பிரஜைகள் குழுக்களின் கருத்துக்களுக்குச் செவிசாய்க்காமல் குறுகிய காலத்தில் மேற்கொள்வது சாத்தியப்படாத ஒன்றாகும்.

விசேடமாக தற்போது இருக்கும் சில கட்டளைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டி இருக்கின்றன. அதனால் எமது அரசு அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதன் பிரகாரம் புதிய அரசமைப்பு



திருத்தம் தொடர்பான ஆரம்பகட்ட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரசு புதிய அரசமைப்பு திருத்தம் மேற்கொள்ளும்போது அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடி, அனைத்து தரப்பினருக்கும் செவிசாய்க்க நடவடிக்கை எடுத்துள்ளது. விசேடமாக மக்கள் மயமான அரசமைப்பாக புதிய அரசமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பதே எமது அரசின் நோக்கமாகும். அதனால் புதிய அரசமைப்பு திருத்தம் தொடர்பில் சமூக கருத்தாடல் ஒன்றுக்குத் திறந்து விடப்பட வேண்டும். அதேபோன்று நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தாத ஏனைய அரசியல் கட்சிகளின் கருத்துக்களுக்கும் செவிசாய்க்கப்படும்.

அதன் பிரகாரம் அரசு வரைவு செய்யும் புதிய அரசமைப்பு சமூகத்தில் அனைத்து தரப்பினரின் கருத்துக்களை மதித்து, வரைவு செய்யப்படுகின்ற, இதுவரை காலமும் உருவாகாத மக்கள் மயமான அரசமைப்பாக அமையும்.

அத்துடன் நாட்டின் பிரதான சட்டமான அரசமைப்பு அடிக்கடி திருத்தப்படக்கூடாது என்பதால், விசேட நிபுணர்களின் கருத்துக்களைக் கேட்டு, ஆழமாக ஆராய்ந்து தயாரிப்பதே எமது அரசின் நோக்கமாகும். அதனால் இதற்காகச் சில காலம் தேவைப்படும். எமது கொள்கைப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பிரகாரம் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

எமது அரசு ஆட்சிக்கு வந்து இன்னும் ஒரு வருடம் செல்லவும் இல்லை. இன்னும் எங்களுக்கு 4 வருடங்கள் இருக்கின்றன. அதனால் இது தொடர்பில் அவசரப்படத் தேவையில்லை. எமது ஆட்சிக் காலத்துக்குள் புதிய அரசமைப்பு திருத்தங்களை மேற்கொள்வோம்" – என்றார்.

---

## தமிழின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் மனித குலத்துக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எடுக்கப்படும் இலங்கை தொடர்பான தீர்மானம் வலுப்பெறும் வகையில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றன.

வடக்கு – கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டங்களில், ஈழத்தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன அழிப்புக்குப் பன்னாட்டு நீதிப் பொறிமுறை ஊடான விசாரணைகள் உடன் மேற்கொள்ளப்பட வேண்டும், இனப் படுகொலைகளுக்கான நடவடிக்கைகள் காலம் தாழ்த்தப்படாமல் உடன் மேற்கொள்ளப்பட வேண்டும், தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் இடம்பெற்ற இன அழிப்பு உட்பட பன்னாட்டுக் குற்றங்களை விசாரிக்கவும் குற்றவாளிகளை விசாரணைக்கு உட்படுத்தவும் ஒரு பன்னாட்டு குற்றவியல் நீதித்துறை அமைப்பை உருவாக்க வேண்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியைச் சர்வதேசம் காலஇழுத்தடிப்பு செய்யாமல் உடன் சர்வதேச நீதிப் பொறிமுறையை மேற்கொள்ள வழி செய்ய வேண்டும், தமிழின அழிப்பு நடந்ததைச் சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும், செம்மணி, மன்னார் மற்றும் பிற பகுதிகளில் காணப்படும் பெரும்பாலான மனிதப் புதைகுழிகள் தொடர்பாகப் பன்னாட்டுத் தணிக்கை நிபுணர்களை விசாரணைக்காக அனுப்ப வேண்டும், தமிழர் பாரம்பரியப் பண்பாட்டுச் சின்னங்களை அழிக்கும் நடவடிக்கைகளை மற்றும் நில ஆக்கிரமிப்புக்களை உடன் நிறுத்த வேண்டும், தமிழ் அரசியல் கைதிகள் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் நிகழ்நிலைச் சட்டத்தை இரத்துச் செய்ய இலங்கை அரசுக்குப் பன்னாட்டு சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளைப் போராட்டக்காரர்கள் முன்வைத்தனர்.

இதேவேளை, பன்னாட்டு நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி கையெழுத்தும் திரட்டப்பட்டது.

இந்தப் போராட்டங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறையைக் கோரி வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் முன்னெடுக்கின்ற போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு ஐ.நா. அலுவலகத்தின் முன்பாக இன்று கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. மாண்புமிகு மலையக மக்கள் சிவில் சமூகக் கூட்டிணைவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

---

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இன்று நேரில் பார்வையிட்டார்.

அதன்பின்னர் அவர் ஊடகங்களுக்குத் தனது கருத்துக்களைத் தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் 21 ஆவது நாளாக இன்று நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கல்விச் சீர்திருத்தம்

கல்விச் சீர்திருத்தம் அல்லது மறுசீரமைப்பு என்ற பெயரில் தேசிய மக்கள் சக்தி அரசு எடுத்திருக்கும் முன் நகர்வுகள் சர்ச்சைக்கும் விமர்சனத்துக்கும் உள்ளாகியிருக்கின்றன.

தேசிய மக்கள் சக்தி அரசுக்குள்ளேயே இது தொடர்பில் கருத்து வேறுபாடுகளும் முரண்பாடுகளும் இருப்பதான செய்திகள் கசிந்து கொண்டிருக்கின்றன.

இந்தப் பின்புலத்திலேயே எதிரணி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பிரேம்நாத் சி தொலவத்த இந்த விடயங்களை ஒட்டி ஊடக மாநாட்டில் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

இத்தகைய கல்விச் சீர்திருத்த நகர்வுகளை முன்னைய ரணில் விக்கிரமசிங்கவின் அரசு முன்னெடுத்தபோது அதனைக் கடுமையாக எதிர்த்த - ஜே.வி.பி. உட்பட்ட - தேசிய மக்கள் சக்தி, இப்போது தான் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டதும் அதே பாணி நடவடிக்கையை முன்னெடுக்க முயல்வதாக அவர் சுட்டிக் காட்டுகிறார்.

தங்களின் அந்த ஆட்சியில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைத்தான் இப்போது இந்த அரசு எடுப்பதாக அவர் சுட்டிக் காட்டுகிறார்.

இந்த விடயத்தில் மாத்திரமல்ல, பல பொதுவான விவகாரங்கள் - பொருளாதாரக் கொள்கைக் கோட்பாடுகள் போன்ற விடயங்களில் எல்லாம் - எதிரணியில் இருந்த போது எதிர்ப்பு காட்டிய தேசிய மக்கள் சக்தி, இப்போது அவற்றைத் தன்னுடைய அரசின் செயற்போக்காக பின்பற்றுகின்றது. பல விவகாரங்களில் ரணில் அரசின் நடவடிக்கைகளை எதிர்த்த தேசிய மக்கள் சக்தி, இப்போது அதிகாரத்துக்கு வந்ததும், வேறு வழியின்றி அவற்றைத் தானே பின்பற்ற முனைகின்றமைதான் வேடிக்கையிலும் வேடிக்கை.

எதிரணியில் இருக்கும் போது எல்லாவற்றையும் எதிர்ப்பது, ஆட்சிக்கு வந்ததும் வேறு வழியின்றி அவற்றையெல்லாம் ஆதரிப்பது என்பதுதான் இலங்கையின் நாடாளுமன்ற அரசியலின் சித்தாந்தமாக இருந்து வருவது கண்கூடு.

கல்வி மறுசீரமைப்பிற்கு முன்னர் எதிர்ப்பை வெளியிட்ட மக்கள் விடுதலை முன்னணி, முன்பு ரணிலின் ஆட்சியில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவே இப்போது முயற்சிகளை முன்னெடுத்துள்ளதாக பிரேம்நாத் சி தொலவத்த கூறுகின்றார். ஆயினும், எது எவ்வாறிருப்பினும், கல்வி மறுசீரமைப்பு என்ற பெயரில் எந்தவொரு பாடசாலையையும் மூடுவதற்கு முயற்சிக்க வேண்டாம் என அரசாங்கத்தை வலியுறுத்துவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

''இருபது ஆண்டுகளாக கல்வி மறுசீரமைப்பிற்கு எதிர்ப்பை வெளியிட்ட இவர்கள், எமது ஆட்சி காலத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களையே தற்போது நடைமுறைப்படுத்த முனைகின்றனர். எம்மால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் போனமையில் சுனில் ஹந்துன்னெத்தி போன்றோர் பிரதான காரணமானவர்களாவர். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் கல்வி மறுசீரமைப்பு யோசனைகள் முன்வைக்கப்பட்ட போது அவற்றுக்கு எதிராக இவர்கள் வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பல்கலைகழக கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சித்த சந்தர்ப்பங்களிலும் அவர்கள் அவற்றுக்கு வாய்ப்பளிக்கவில்லை. இந்த அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிப்பவர்கள் கடந்த காலங்களில் நாட்டுக்குப் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியவர்களாவர். ஆனால் இன்று அவர்கள் எம்மால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எமக்கு அழைப்பு விடுக்கின்றனர்.'' - என்று தொலவத்த கூறும் விடயத்தில் உண்மை இல்லாமல் இல்லை.

கல்வி மறுசீரமைப்பு எனக் கூறிக் கொண்டு பாடசாலை கட்டமைப்பில் கண்ணை மூடிக்கொண்டு கைவைக்கக் கூடாது. முறையான ஆய்வுகள், சரியான நிபுணத்துவ ஆலோசனைகள் இல்லாமல் நம் எதிர்கால சமுதாயத்தின் கல்வி முறைமைகளைச் சீரழித்து விடக் கூடாது.




# இனவழிப்புக்குச் சர்வதேச நீதி கோரி கொழும்பிலும் இன்று கவனவீர்ப்பு!

சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறையைக் கோரி வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் முன்னெடுக்கின்ற போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு ஐ.நா. அலு வலகத்தின் முன்பாக இன்று கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. மாண்புமிகு மலையக மக்கள் சிவில் சமூகக் கூட்டிணைவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
















# நல்லூர் பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா!

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக 2025 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழா நேற்று (25) கொக்குவில் செல்வ மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி உதயகுமார் யசோதா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் சிறப்பு விருந்தினர்களாக சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன், இராஜேஸ்வரி அறக்கட்டளை நிறுவுனர் செல்லத்துரை திருமாறன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுணலினி விஜயரத்தினமும் கலந்து கொண்டனர்.

அமரர் குழந்தை சண்முகலிங்கனின் ஞாபகார்த்த அரங்கில் இடம்பெற்ற இந்த ஆண்டுக்கான பண்பாட்டு விழா பல்வேறுபட்ட கலை இலக்கிய விழுமியங்களையும் உள்ளடக்கியிருந்த வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாச்சிமார் கோயிலிருந்து பண்பாட்டுப் பேரணியுடன் ஆரம்பமான நிகழ்வில் தமிழ் தாய் வாழ்த்து, வரவேற்பு நடனம், மங்கல இசை, இசைச்சங்கமம், நாடகம் (மாருதப்புரவீகவல்லி), நடனம் (தமிழ் வணக்கம் – நல்லைக் கலாமந்தீர் நடனாலயம்) இசை நாடகம் (சத்தியவான் சாவித்திரி) என்பன இடம்பெற்றன.

மூத்த கலைஞர்களுக்கான “கலை ஞானச்சுடர் விருது” மற்றும் இளங்கலைஞர்களுக்கான இளங்கலைஞர் விருதுகள் என்பன முதன்மை விருந்தினரால் வழங்கப்பட்டன.









# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பிறந்துள்ள குழந்தைகளுக்கு டிஜிட்டல் பிறப்பு சான்றிதழ்

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பிறந்த குழந்தைகளுக்கான டிஜிட்டல் பிறப்பு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று (25) கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் மக்கள் தொகை திட்டத்தின் கீழ் டிஜிட்டல் முறையிலான பிறப்புச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.







பதிவாளர் நாயக திணைக்களத்தின் ஏற்பாட்டில் டிஜிட்டல் செயற்றிட்டத்தின் மூலம் டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் செயற்றிட்டம் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டுவருகின்ற நிலையில் கிளிநொச்சி மாவட்டத்துக்கான டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு வலய பிரதி பதிவாளர் நாயகம் ப.பிரபாகர் தலைமையில் கிளிநொச்சி மாவட்டச்செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்ட பதில் அரச அதிபர் சு.முரளிதரன் கலந்து கொண்டார்.

வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் தாரகா பிறேம்ஆனந், மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) அஜிதா பிரதீபன், பச்சிலைப்பள்ளி, கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர்கள், மாவட்ட பதிவாளர்கள், உத்தியோகத்தர் என பலர் கலந்து கொண்டனர்.

இந்த டிஜிட்டல் தேசிய பிறப்புச் சான்றிதழ் பாரம்பரிய காகித சான்றிதழைக் காட்டிலும் அதிநவீன, பாதுகாப்பான ஆவணமாகும்.

போலி ஆவணங்களைக் குறைக்க அழிக்க முடியாத தகவல் தரவு அமைப்புகளின் சேமிப்பாகும். வெளிநாட்டு பயணம் மற்றும் சட்டப் பணிகளுக்கு சர்வதேச அளவில் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுவதோடு, சிங்கள மற்றும் ஆங்கிலம் அல்லது தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சான்றிதழைப் பெறுவதன் மூலம் பிறப்புச் சான்றிதழ்களின் தனி மொழிபெயர்ப்புகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படாது.

பிறப்புச் சான்றிதழின் எந்தவொரு திருத்தமும் செய்யப்படும்போது, தகவல் தரவு அமைப்பு புதுப்பிக்கப்படும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கரைச்சி, கண்டாவளை பூநகரி பிரதேச செயலர் பிரிவுகளில் 5 பிள்ளைகளுக்கான பிறப்பு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# முழுமை பெறாத வீட்டுத் திட்டங்களை நேரில் பார்வையிட்டார் பிரதி அமைச்சர்!

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

முழுமை பெறாத வீட்டுத் திட்டங்களை பிரதி அமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டார்.

டயகம சந்திரிகாமம் தோட்டத்தில் 05 .08.2019 ஆண்டு தீ விபத்தால் 11 வீடுகள் தீயினால் எரிந்து சாம்பலாகின. அவர்களுக்குக் கடந்த அரசால் 2021 ஆம் ஆண்டு தனி வீடுகள் அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு முழுமை பெறாத நிலையில் மக்கள் தக்காளி கூடாரங்கள் வாழ்ந்து வந்தனர்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் அரசால் முழுமை பெறாத வீடுகள் பூரணப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுத்து வருகின்ற நிலையில் இந்த மக்களுக்கான இடையில் நிறுத்தப்பட்ட



வீடுகளை மீண்டும் சரி செய்வதற்கான பணி கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் அதனைப் பார்வையிடுவதற்காக தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் அங்கு சென்றிருந்தார்.

அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

வீடு அமைப்பில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் மற்றும் வீடுகளில் உள்ள பிரச்சினைகள் வீடு அமைப்பு அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாச காலத்தில் வீட அமைப்பு திட்டங்களுக்காக அதிக விளம்பரத்துக்கான பணம் செலவு தொடர்பாகவும் கருத்துகளையும் முன்வைத்தார்.



# மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருள்கள் மீட்டு அழிப்பு!

(பா.சதீசன்)

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட முத்தையன்கட்டு பொது சுகாதார பிரிவு, பகுதிகளில் உள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் வாணிபங்களில் பொது சுகாதார பரிசோதகர்களால் திடீர் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

குறித்த நடவடிக்கையில் முத்தையன்கட்டு வலதுகரை, முத்தையன்கட்டு இடதுகரை பகுதிகளில் உள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் வாணிபங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருள்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன. சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.



முத்தையன்கட்டு பொது சுகாதார பரிசோதகர் லோஜிதன், ஒட்டுசுட்டான் பொதுச் சுகாதார பரிசோதகர் டிலக்சன் ஆகியோர் இணைந்து குறித்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.





# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கென சேகரிக்கப்பட்ட நிதி தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்திடம்!

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கென புலம்பெயர் மக்களால் சேகரிக்கப்பட்ட 6.4 மில்லியன் ரூபா நிதி தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்திடம் கடந்த 21 ஆம் திகதி கையளிக்கப்பட்டது என்று கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட சத்திர சிகிச்சைப் பிரிவை இயங்க வைக்கத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்யவென தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் மேற்கொண்ட உலகளாவிய நிதி சேகரிப்பு திட்டத்தின் மூலம் கிடைத்த நிதியில் தேவையான நிதியைக் கடந்த 2022 இல் கையளித்திருந்தனர். அதன் பின்னர் மிகுதிப் பணம் அந்தந்த நாடுகளின் வங்கிக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தன.

தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனம், கனடா வாழ் தென்மராட்சி மக்களிடமிருந்து சேர்க்கப்பட்ட நிதியிலிருந்து அவசர சிகிச்சைக்கான உபகரணக் கொள்வனவுக்காக வழங்கிய பின்னர் மீதமாகவிருந்த நிதியில் ரூபா 6,395, 483.89 இனை வங்கி மூலமாகவும் மேலதிகமாக நேரடியாக மிகுதிப் பணத்தையும் சேர்த்து 6.4 மில்லியன்களாக கடந்த 21 ஆம் திகதி கனடாவின் தலைவர் ஞானகுணசீலன், அமைப்பின் நிர்வாக சபை உறுப்பினர்களான திருமதி வாசுகி, திருமதி. சுபோதினி மற்றும் தென்மராட்சி மக்கள் நலன் விரும்பி ராகவன் ஆகியோரும் இணைந்து தென்மராட்சி அபிவிருத்திக் கழக நிர்வாகத்தினரிடம் கையளித்துள்ளனர்.

இப்பணமானது வைத்தியசாலை சத்திர சிகிச்சைக் கூட அபிவிருத்திக்காக சேர்க்கப்பட்டதால், அதன் அபிவிருத்தி தொடர்பான மேலதிக கோரிக்கைகள் வைத்தியசாலை நிர்வாகத்திலிருந்து கிடைக்கும்போது, பரிசீலணை செய்து பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.







# மாகாண செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டு

மாகாணமட்ட செயற்பட்டுமகிழ்வோம் நிகழ்வில் பங்குபற்றி வெற்றியீட்டிய வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வும் அந்த மாணவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களைப் பாராட்டும் நிகழ்வும் க.பொ.த.சாதாரண பரீட்சையில் 100 வீத சித்திபெற வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கான பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று (25) வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றன.





வித்தியாலய அதிபர் தி. அபராஜிதன் தலைமையில் நடைபெற்ற விழாவில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தமிழ்பாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் பரஞ்சோதி பரணீதரனும் சிறப்பு விருந்தினராக ஆசிரிய ஆலோசகரும் வித்தியாலய வலய பிரதிநிதியுமான நடராசா திருவாசகனும் கலந்து கொண்டனர்.




### புனித பத்திரிசியார் கல்லூரியின்

# 175 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முத்திரை வெளியீடு!

யாழ்ப்பாணம், புனித பத்திரிசியார் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு விழா கல்லூரியின் பிரதி அதிபர் தலைமையில் நேற்று (25) கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் கலந்து கொண்டனர்.

புனித பத்திரிசியார் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட முதலாவது ஞாபகார்த்த முத்திரையை யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கும், இரண்டாவது ஞாபகார்த்த முத்திரையை அரச அதிபருக்கும் இலங்கை தபால் திணைக்கள பிரதித் தபால்மா அதிபர் உத்தியோக பூர்வமாக வழங்கி வெளியிட்டு வைத்தார்.

நிகழ்வில் யாழ். மநகர சபையின் பிரதி மேயர் இம்மானுவல் தயாளன், கல்லூரி உப அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.








# இரசாயனம், கதிர்வீச்சு போன்றவற்றின் ஆபத்துக்கள் தொடர்பில் விழிப்புணர்வு

இரசாயனம், உயிரியல், கதிர்வீச்சு மற்றும் அணுக்கசிவுகளால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களைக் கையாள்வது மாவட்ட மட்ட கட்டமைப்பை உருவாக்கல் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வானது அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைமையுரையாற்றிய அரச அதிபர் , கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ளம் உள்ளிட்ட அனர்த்தத்தின் போது ஒத்துழைப்பு நல்கிய முப்படையினருக்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தத்துடன் ஒப்பீடு செய்யும் போது, இரசாயனம் மற்றும் கதிர்வீச்சு, அணுகசிவு போன்ற இடர்களுக்கு எதிர்காலத்தில் பதிலிறுக்கும் வகையில் முன்னாயத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அண்மையில் தீவுப்பகுதியில் கரையொதுங்கிய பிளாஸ்ரிக் துகள்கள் மற்றும் இரசாயன பாதிப்பு தொடர்பான விழிப்பணர்வு பெரும்பாலான மக்களிடம் இல்லை எனவும் அதேபோல் அணுக்கசிவு மற்றும் கதிர்வீச்சுகளால் ஏற்படும் ஆபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வும் பெரும்பாலான மக்களுக்கு இல்லாத காரணத்தால், முதற்கட்டமாக குறிப்பிடப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்களுக்காக இந்தச் செயலமர்வு மிக முக்கியம் எனவும் தெரிவித்தார்.

விழிப்புணர்வுச் செயலமர்வின் வளவாளர்களாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் சான் பத்திரன மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ரி. என் சூரியராஜா ஆகியோர் பங்கு பற்றினர்.

இரசாயன, உயிரியல், அணுக்கசிவு மற்றும் கதிர் வீச்சு பாதுகாப்பு தொடர்பாக மாவட்ட மட்ட எதிர்கால அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கை தொடர்பாக பிரதிப் பணிப்பாளர் ரி. என் சூரியராஜாவால் விவரிக்கபட்டது.

செயலமர்வில் பிரதேச செயலாளர்கள், முப்படைகளின் அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள், வைத்தியர்கள் மாவட்ட மற்றும் பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.









# நூல் வெளியீடும் கலந்துரையாடலும்!

கிழக்குப் பல்கலைக்கழகம், சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக பழைய மாணவர் சங்கம் நடத்திய, ஆய்வாளர் கமலநாதன் பத்திநாதனின் 'உத்தியாக்கள்: கிழக்கிலங்கை கடலோர வேடர்களின் பண்பாட்டு அசைவுகள்' என்னும் நூலின் வெளியீட்டு விழாவானது, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வு, வெளியீட்டு நிகழ்வும் கலந்துரையாடலும் என்ற வடிவில் அமைந்திருந்தது.

நூலின் அறிமுக உரையை நூலாசிரியர் கமலநாதன் பத்திநாதன் ஆற்றியிருந்தார். தொடர்ந்து, நூலுக்கான மதிப்பீட்டு உரைகளை வித்தகர் கு. சண்முகம், சிரேஷ்ட விரிவுரையாளர் க. மோகனதாசன், ஆய்வாளர் துலாஞ்சனன், ஆய்வாளர் இத்திரிஸ் மற்றும் எழுத்தாளர் நீலாவணை இந்திரா முதலியோர் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் கமலநாதன் பத்திநாதன் தாயார் பெற, ஏனைய பிரதிகளை நிகழ்வுக்கு வந்திருந்த விருந்தினர்கள் பெற்றுக் கொண்டனர். குறித்த நிகழ்வுக்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், துறைசார் ஆர்வலர்கள், மாணவர்கள், நண்பர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# இரவு நேர துரித உணவு விற்பனை நிலையங்கள் திடீர் பரிசோதனை!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் சுற்றாடல் மற்றும் தொழில் சுகாதார பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எஸ்.எம்.பௌசாட் மற்றும் உணவு மருந்து பரிசோதகர் ஜீவ ராஜா ஆகியோரின் ஏற்பாட்டில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் நௌசாட் முஸ்தபா, மேற்பார்வை சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் பைலான் நளீம் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் சம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள இரவு நேரத் துரித உணவு விற்பனை நிலையங்கள் மற்றும் கிழங்குப் பொரி விற்பனை நிலையங்கள் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.




கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் வழிகாட்டலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவின் விசேட பொதுச் சுகாதார பரிசோதகர் சுகாதார வைத்திய அதிகாரி குழுவினர் நான்கு குழுக்களாக இணைந்து நடத்திய இந்தச் சோதனையில் 39 உணவகங்கள் பரிசோதிக்கப்பட்டன.

இந்தப் பரிசோதனையின் போது மனித நலனுக்கு உதவாத மற்றும் சுகாதார நெறிமுறைகளை பின்பற்றாமல் உணவுகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட, சட்டவிரோதமாகக் களஞ்சியப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் தூய்மையற்ற பாத்திரங்கள் பெருமளவில் கைப்பற்றப்பட்டு சட்ட நடவடிக்கைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லிமா பஷீரும் கலந்து கொண்டார்.






# தமிழ்நாடு "கவிதை உறவு" ஆசிரியரான ஏர்வாடி இராதாகிருஷ்ணனுக்கு வரவேற்பு

தமிழ்நாடு "கவிதை உறவு" ஆசிரியர் கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதா கிருஷ்ணனுக்கான வரவேற்பு இலங்கை ஹாசிம் உமர் அறக்கட்டளை சார்பில் தலைமையகத்தில் மேமன்கவி தலைமையில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன், திருமதி சிதம்பரம்மாள் ஆகியோரை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், திருமதி ஹாசிம் உமர் தம்பதியினர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

இலக்கிய செயற்பாட்டாளாரும் ஏர்வாடியாரின் நண்பருமான நடேசப்பிள்ளைக்கும் கௌரவம் வழங்கப்பட்டது.

வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜனும் நிகழ்வில் கலந்து கொண்டார்.





# வவுனியாவில் பரசூட் முறையில் விதைப்பு செய்யப்பட்ட நெல் அறுவடை!

(கி.வசந்தன்)

பரசூட் முறையில் விதைப்பு செய்யப்பட்ட நெல் அறுவடை வயல் விழா வவுனியா தாண்டிகுளம் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

விவசாய திணைக்களத்தின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் 70 ஏக்கர் வயலில் விவசாயிகளின் பங்களிப்போடு பரசூட் முறையில் நெல் விதைப்பு சிறுபோகத்துக்காக இடம் பெற்றது.

இதன் அறுவடை வயல் விழா தாண்டிக்குளத்தில் உள்ள மு.தேவராசா என்பவரின் வயலில் பிரதம மாகாண விவசாய பணிப்பாளர் திருமதி ஜே. எம்.முரளிதரன் தலைமையில் பாட விதான உத்தியோகத்தர் கு.கஜரூபனின் வழிகாட்டலில் வவுனியா அரச அதிபர் பீ.ஏ.சரத் சந்திர பிரதம விருந்தினராக கலந்து கொண்ட நிலையில் இடம் பெற்றது.

இதன்போது அதிகளவான விளைச்சல் கிடைக்கப்பெற்றமை அவதானிக்கப்பட்டது. புள்ளிவிவர திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டு அதனை உறுதிப்படுத்தியிருந்தனர்.



# வடக்கின் சுற்றுலாத் தேவைகள் மதிப்பீடு பற்றிய கலந்துரையாடல்

## ஆளுநர் தலைமையில் நேற்று நடந்தது





ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்டத்தால் (யு.என்.டி.பி.) நடத்தப்படும் வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத் தேவைகள் மதிப்பீடு தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (25) நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

வடக்கு மாகாணம் சுற்றுலாத்துறைக்கு பொருத்தமான இடம். பல முதலீட்டாளர்கள் சுற்றுலாத்துறையில் முதலீடு செய்வதற்காக வருகின்றனர். சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக உலக வங்கி உட்கட்டுமான அபிவிருத்திகளுக்கு எங்களுக்கு உதவ இருக்கின்றன.

வெளிவிவகார வளத் திணைக்களம் (ஈ.ஆர்.டி.) வழங்கிய வழிகாட்டுதலுடன், எங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக யு.என்.டி.பி. நிறுவனத்தால் இந்த முயற்சி சாத்தியமானது. இந்தச் செயல்முறை முழுவதும் காட்டப்பட்ட ஈடுபாடு மற்றும் அக்கறைக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

எமது பிராந்தியத்தில் நிலையான சுற்றுலாவின் முக்கியத்துவத்தை அங்கீகரித்ததற்காகவும், இந்த முயற்சிக்கு வழங்கப்பட்ட பரிசீலனைக்காகவும் ஜனாதிபதிக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை நேயச் சுற்றுலாவை வளர்க்கும், எமது இயற்கை மற்றும் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் மற்றும் மாகாண மற்றும் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமாக பங்களிக்கும் ஒரு விரிவான திட்டத்தை வடிவமைக்க இந்த முயற்சி உதவும் என்று நாங்கள் உண்மையிலேயே நம்புகிறோம்.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாவுக்கு ஒரு துடிப்பான, நிலையான எதிர்காலத்துக்கு வழி வகுக்க இந்தத் தருணத்தைப் பயன்படுத்துவோம்.- என்றார்.

அதனைத் தொடர்ந்து யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிபுணர்கள் தமது மதிப்பீடு தொடர்பான முடிவுகளைத் தெரியப்படுத்தினர். அதனடிப்படையில் மிக நீண்ட கலந்துரையாடல் நடைபெற்றது. எவ்வாறு இதை நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

ஏனைய மாகாணங்கள் போர்க் காலங்களிலும் சுற்றுலாத் துறைக்கான அடிப்படைக் கட்டுமானங்களைக் கொண்டிருந்த நிலையில் துரதிஷ்டவசமாக வடக்கு மாகாணம் அவ்வாறானதொரு ஏதுநிலைகளைக் கொண்டிருக்கவில்லை எனக் குறிப்பிட்ட ஆளுநர், தற்போது தயாரிக்கப்படும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை அடைய முடியும் எனத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், மாவட்டச் செயலாளர்கள், யு.என்.டி.பி. நிறுவனப் பிரதிநிதிகள், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் பிரதிநிதி, நகர அபிவிருத்தி அதிகார சபையினர், வடக்கு மாகாண சுற்றுலாத் துறை பணியத்தின் தலைவர், வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களப் பிரதிநிதிகள், தொல்பொருள் திணைக்களப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பில் கலந்துரையாடல்





(றிபாஸ்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் ஆளணிப் பிரச்சினைகள் சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். அப்துல் வாஸீத், சுகாதார அமைச்சர் நலிந்த ஜெயதிஸ்ஸவை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு வசதிகளை மீளமைப்பு, புதிய கட்டடத்துக்கான மருத்துவ உபகரணங்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்களை நியமித்தல், சிறு ஊழியர்களுக்கான ஓய்வு விடுதிகள் போன்ற விடயங்களையும் அமைச்சரிடம் எடுத்துக் கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் பொத்துவில் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் காணியையும் பெற்றுத்தருமாறும் கூறினார்.

இதேவேளை கோமாரி வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் பெற்றுக் கொள்ளல், பொத்துவில் உல்லை பிரதேசத்தில் காணப்படும் வைத்தியசாலையைத் தரமுயர்த்தல் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

சுகாதார அமைச்சர் ஓகஸ்ட் மாதம் இறுதி வாரத்தில் பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளைப் பார்வையிடு வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மாலைதீவில் மோடிக்கு உற்சாகமான வரவேற்பு

பிரதமர் நரேந்திர மோடி நேற்று மாலை தீவு தலைநகர் மாலேவுக்கு சென்றார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கேரளாவில் இருந்து 700 கிலோ மீற்றர் தொலைவில் மாலைதீவு அமைந்துள்ளது. அந்த நாட்டின் 60 ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதில் இந்திய பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார். இதற்காக பிரதமர் மோடி நேற்று சிறப்பு விமானத்தில் மாலைதீவில் வேலனா சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கினார்.

மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு விமான நிலையத்துக்கு நேரடியாக சென்று பிரதமர் மோடியை வரவேற்றார். விமான நிலையத்தில் ஏராளமான இந்தியர்கள் திரண்டு வந்து அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். அங்கிருந்து மாலைதீவு தலைநகர் மாலேவுக்கு பிரதமர் நரேந்திர மோடி சென்றார். சுதந்திர தின சதுக்கத்தில் அவருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதன்பிறகு மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சுவை பிரதமர் மோடி சந்தித்துப் பேசினார். இரு தலைவர்களும் நிருபர்களுக்கு கூட்டாக பேட்டியளித்தனர். அப்போது பிரதமர் நரேந்திர மோடி தெரிவிக்கையில்,

இந்தியா– மாலைதீவு இடையிலான தூதரக உறவு 60 ஆண்டுகளை கடந்துள்ளது. இரு நாடுகளின் இடையிலான உறவு கடலைவிட ஆழமானது. பொருளாதார நெருக்கடி– கரோனா பெருந்தொற்று – இயற்கை பேரிடர் காலங்களில் முதல் நபராக மாலைதீவுக்கு இந்தியா உதவி செய்தது.

இந்தியாவின் சார்பில் மாலைதீவுக்கு 5 ஆயிரம் கோடி ரூபா கடன் உதவி வழங்கப்படும். இதன் மூலம் மாலைதீவின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். மக்களின் வாழ்கைத்தரம் மேம்படும்” என்றார்.

# மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் மைத்தேயி மற்றும் குகி ஆகிய இரு இனக் குழுக்களுக்கு இடையே கடந்த 2023 ஆம் ஆண்டு மே 3 ஆம் திகதி தொடங்கிய மோதல் பெரும் வன்முறையாக வெடித்தது. இதில், 250 பேர் உயிரிழந்தனர். 60,000 இற்கும் மேற்பட்டோர் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறும் சூழல் ஏற்பட்டது.

கலவரத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் மணிப்பூர் முதல்வர் என்.பிரேன் சிங் தனது பதவியை இராஜினமா செய்வதாக அறிவித்தார். இதையடுத்து, கடந்த பெப்ரவரி 13 முதல் மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மேலும், 6 மாதங்களுக்கு குடியரசுத் தலைவர் ஆட்சியை நீட்டிக்க வகை செய்யும் தீர்மானத்தை மாநிலங்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அறிமுகப்படுத்தினார்.

மாநிலங்களவை செய்திக்குறிப்பில் இதுகுறித்து குறிப்பிடுகையில்,

அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 356 இன் கீழ் மணிப்பூர் மாநிலத்தில் 2025, பெப்ரவரி 13 இல் பிரகடனம் செய்யப்பட்ட



குடியரசுத் தலைவர் ஆட்சியை மேலும் 6 மாதங்கள் தொடர்ந்து நீட்டிப்பதற்கான ஒப்புதலை அவை வழங்கியுள்ளது. இது, வரும் ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு மாநிலத்தில் அமுல்படுத்தப்படும் குடியரசுத் தலைவர் ஆட்சி வழக்கமாக 6 மாதங்கள் வரை நீடிக்கும். ஆனாலும் இதனை, நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் ஒவ்வொரு ஆறு மாத காலத்துக்கும் 3 ஆண்டுகள் வரை நீடிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மூன்றாம் உலகப் போர் பதற்றம்; பிரித்தானியா மீது குற்றச்சாட்டு

ரஷ்யாவை தூண்டிவிட்டு மூன்றாம் உலகப் போருக்கான ஆபத்தை வரவழைப்பதுடன், விளாடிமிர் புடினுக்கு எதிராக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பையும் தூண்டி விட பிரித்தானியா முயல்வதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை ரஷ்ய உளவுத்துறை தலைவரும் ரஷ்ய பாதுகாப்பு கவுன்சிலின் முன்னாள் தலைவருமான நிகோலாய் பட்ருஷேவ் தெரிவித்துள்ளார்.

பால்டிக் கடலில் உக்ரைனுடன் சேர்ந்து பிரித்தானியாவும் ரஷ்ய எதிர்ப்பு ஆத்திரமூட்டல்களை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க போர் கப்பல் மீது போலி ரஷ்ய டார்பிடோ தாக்குதல் சம்பவம் இதன் ஒரு பகுதி என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சோவியத் காலத்தில் தயாரிக்கப்பட்ட டார்பிடோவை பிரித்தானியாவிற்கு உக்ரைன் அளித்துள்ள ஆதாரம் தங்களிடம் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய – அமெரிக்க உறவை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் பிரித்தானியாவும் களமிறங்கியுள்ளதாக குற்றஞ்சாட்டும் அவர், உக்ரைனுக்கு முழு அளவிலான இராணுவ உதவியைத் தொடர அமெரிக்காவை சமாதானப்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நேட்டோவின் தற்போதைய நடவடிக்கைகள் அனைத்தும் ரஷ்யாவிற்கு எதிரான முழுவீச்சிலான போருக்கான ஒத்திகை என்றே அவர் தெரிவித்துள்ளார்.



ரஷ்யா ஒருபோதும் போரை நாடுவதில்லை என குறிப்பிட்டுள்ள நிகோலாய் பட்ருஷேவ், ஆனால் அதன் தேசிய நலன்களையும் அதன் குடிமக்களின் பாதுகாப்பையும் கிடைக்கக்கூடிய எல்லா வழிகளிலும் பாதுகாக்கும் என நிகோலாய் பட்ருஷேவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் அணு ஆயுதக் கவசம் எங்களது நாட்டின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு சிறந்த உத்தரவாதம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அரசியலில் செல்வாக்கு மிகுந்த நிகோலாய் பட்ருஷேவ், ஜனாதிபதியாக விளாடிமிர் புடின் பதவி துறக்கும் போது அந்த பொறுப்புக்கு தமது மகனைக் கொண்டுவர தற்போதே நடவடிக்கை எடுத்து வருகின்றார் என தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இத்தாலியில் வீதியில் விழுந்து தீப்பற்றிய சிறிய ரக விமானம்



## இருவர் உயிரிழப்பு



இத்தாலியில் வீதியில் விழுந்து சிறிய ரக விமானம் தீப்பிடித்ததில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இத்தாலியின் பிரெசியா மாகாணத்தில் உள்ள அஸ்ஸானோ மெல்லா நகருக்கு அருகே நெடுஞ்சாலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விமானத்தில் பயணித்த இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

விமானத்தின் தீப்பிழம்புகள் அந்த நேரத்தில் நெடுஞ்சாலையில் கடந்து சென்ற இரண்டு வாகனங்களுக்கும் பரவியுள்ளது.

இதையடுத்து, அங்கிருந்த மற்ற வாகனங்கள் உடனே நிறுத்தப்பட்டுள்ள நிலையில், அதில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

அத்தோடு, மற்றொரு நபர் காயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அவசரகால குழுவினர் விரைவாக செயல்பட்டு தீயை அணைத்ததுடன் விமான விபத்தில் உயிரிழந்தவர்கள், செர்ஜியோ ரவாக்லியா (வயது 75) மற்றும் அன்னா மரியா (வயது 50) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய அதிகாரிகள் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

# கனடா முரசு

பக்கங்கள் 03

சனிக்கிழமை 26/07/2025

**கனடாவுக்கு குப்பை பைகளில் கடத்தப்பட்ட போதைப் பொருள்**



அமெரிக்காவிலிருந்து கனடா வுக்குள் பிரவேசிக்க முயன்ற C3▶





# கனடாவில் மூன்று மாதங்களில் வேலைவாய்ப்பு வீதம் அதிகரிப்பு

கனடாவில் கடந்த மூன்று மாதங்களில் வேலைவாய்ப்பு நிலை இரண்டு வீதமாக உயர்வடைந்துள்ளது.

இந்த விடயம், கனடாவின் அரசாங்க புள்ளிவிவர திணைக்களம் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி, கடந்த மூன்று மாதங்களில் நாட்டின் வேலைவாய்ப்பு நிலை இரண்டு வீதமாக உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதானமாக, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வேலை வாய்ப்புகளை அதிகரித்து,பொருளாதாரவளத்தைவிரிவாக்குவதில் முக்கிய பங்கு வகித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. C3

# கனடா சிறுமிக்கு இரங்கல் நிகழ்வு; அமெரிக்காவில் கூடிய ஏராளமானோர்





கனேடியச் சிறுமி ஒருவர் அமெரிக்காவில் கடத்தப்பட்டார் என அவளது தந்தை கூறிய நிலையில், நீர்நிலை ஒன்றில் சடலமாக மீட்கப்பட்டார்.

அந்தச் சிறுமியின் இரங்கல் நிகழ்ச்சிக்காக அமெரிக்காவில் ஏராளமானோர் கூடினார்கள்.

கடந்த சனிக்கிழமை, C3▶



# கனடாவில் தங்கச் சுரங்கத்தில் சிக்கிய 3 தொழிலாளர்கள் மீட்கப்பட்டனர்

கனடாவில் தங்கச் சுரங்கத்தில் சிக்கிய 3 தொழிலாளர்கள் 60 மணி நேரத்திற்கு பின் மீட்கப்பட்டுள்ளனர்.

மேற்கு கனடாவில் உள்ள ஒரு தங்கம் மற்றும் செம்பு சுரங்கத்தில் சிக்கிய மூன்று தொழிலாளர்கள் 60 மணி நேரத்திற்கு பின் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

நியூமாண்டு கார்ப்பரேஷன் நடத்திய Red Chris சுரங்கத்தில், செவ்வாய்க்கிழமை காலை இரண்டு பாறை இடிப்புகளால் ஏற்பட்ட தடையால், Hy-Tech Drilling நிறுவனம் சார்பில் பணியாற்றிய கெவின் கும்ப்ஸ், டேரியன் மெட்யூக், ஜெஸ்ஸி சுபாடி ஆகியோர் சிக்கினர்.

நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், இது மிக கவனமாக திட்டமிடப்பட்ட, மிகச்சிறப்பாக செயல்படுத்தப்பட்ட மீட்பு நடவடிக்கை என கூறப்பட்டது.

சுமார் 20 – 30 மீற்றர் நீளம் மற்றும் 7– 8 மீற்றர் உயரம் கொண்ட பாறை விழுந்து சுரங்க வழியை மூடியது.

ட்ரோன்கள் மற்றும் ரிமோட் – கண்ட்ரோல் ஸ்கூப்புகள் மூலம் தடைகளை அகற்றினர்.

பின்னர், அவசர சேவை குழு பாறைகளை அகற்றி, பாதுகாப்பு அறைக்குள் சிக்கிய தொழிலாளர்களை மீட்டது.

அவர்கள் சிக்கியிருந்த பகுதியில் உணவு, குடிநீர் மற்றும் காற்று சப்ளை தொடர்ச்சியாக இருந்ததால் உடல் நலம் பாதிக்கப்படவில்லை.

வான்கூவரிலிருந்து 1,600 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியாவின் வடகிழக்குப் பகுதியில் இந்த சுரங்கம் அமைந்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் சுரங்க மற்றும் கனிம அமைச்சர் இவர்கள் குடும்பத்துடன் மீண்டும் சந்திக்கப் போகிறார்கள் என்பதில் மிகுந்த மகிழ்ச்சி என சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளார்.











# பெரும் தொகை போதைப்பொருளுடன் கட்டுநாயக்கவில் கனேடிய பிரஜை கைது

கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 400 மில்லியன் ரூபா மதிப்புள்ள போதைப்பொருள்களுடன் 52 வயது கனடா பிரஜை ஒருவர் இலங்கையின் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேகநபர், ஒன்ராறியோவைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது. சந்தேகநபர் கனடாவிலிருந்து கட்டாரின் தோஹா வழியாக கட்டுநாயக்கவிற்கு சென்றுள்ளார்.

சந்தேகநபரின் பயணப் பொதிகளை சோதனையிட்ட போது, அதில் 12 கிலோ 196 கிராம் ஹஷீஷ் மற்றும் 5 கிலோ 298 கிராம் கொக்கேய்ன் ஆகிய போதைப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## கனடாவுக்கு குப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒரு சரக்கு லொறியில், சுமார் 23.4 மில்லியன் டொலர் பெறுமதியான கொக்கெயின் போதைப்பொருள் மறைத்து கடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் வின்சர்-டெட்ராய்ட் எல்லைப் பகுதியில் உள்ள அம்பாசடர் பாலம் வழியாக இடம்பெற்றது.

கனடிய எல்லைப் பாதுகாப்பு முகவர் நிறுவன Canada Border Services Agency (CBSA) அதிகாரிகள் நடத்திய இரண்டாவது ஆய்வின் போது, ஒரு சரக்கு லொறியில் குப்பை பைகளில் இந்த போதைப் பொருள் கடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு மீட்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட கொக்கேய்னின் மொத்த எடை 187.5 கிலோகிராம். இதன் மதிப்பு சுமார் 23.4 மில்லியன் கனடியன் டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக, ஒன்டாரியோ மாநில ரிச்மண்ட் ஹில்லைச் சேர்ந்த கம்பிஸ் கரந்திஷ் (வயது 55) என்பவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட போதைமருந்துகள் ராயல் கனேடியன் மவுண்டட் பொலிஸிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்த பறிமுதல் குறித்து CBSA தெற்கு ஒன்டாரியோ பிராந்திய இயக்குநர் மைக்கேல் ப்ரோசியா கருத்து தெரிவிக்கையில், எல்லைப் பாதுகாப்புப் படைத் தனிப் படைகள் போதைப் பொருள்கள் மற்றும் ஆயுதங்களை தடுக்கும் பணியில் இடையறாது செயல்படுவதாக தெரிவித்தார்.

## கனடாவில் மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பாக தொழில்நுட்ப துறையில் ஏற்படும் புதிய தொழிலாளர்கள் தேவையால், இந்நிறுவனங்களில் பல புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, தொழில்நுட்ப துறையில் மட்டுமல்லாது சேவை துறை, உற்பத்தி துறை மற்றும் கட்டுமான துறைகளிலும் வேலை வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இதனால் பல பகுதிகளில் பொது மக்களின் வருமான நிலை மேம்பட்டு, பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

## கனடா சிறுமிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்காவின் நியூயார்க்கிலுள்ள வுஉழனெநசழபய என்னுமிடத்தில் மெலினா என்னும் 9 வயது கனேடிய சிறுமி காணாமல் போனார்.

தானும் தன் மகளும் காரில் பயணித்துக்கொண்டிருக்கும்போது, தான் சிறுநீர் கழிக்கச் சென்று திரும்பியபோது தன் மகளைக் காணவில்லை என்று மெலினாவின் தந்தையான லூசியானோ கூறியிருந்தார்.

பின்னர், அடையாளம் தெரியாத சிலர் தன் மகளை வெள்ளை நிற வான் ஒன்றில் கடத்திச் சென்றனர் என லூசியானோ மாற்றி மாற்றி பேச, பொலிஸாரின் சந்தேகம் அவர் மீது திரும்பியது. அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கிடையில், மெலினாவின் முதல் கட்ட உடற்கூறு ஆய்வு அறிக்கை வெளியாகியுள்ளது.

அவர் தண்ணீரில் அமிழ்த்திக் கொல்லப்பட்டார் எனவும் அது ஒரு கொலை என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

என்றாலும், அவற்றை உறுதி செய்ய மேலதிக ஆய்வகப் பரிசோதனைகள் நடத்தப்பட்டுவருகின்றன.

இந்நிலையில், சுமார் 4,700 பேர் வாழும் Ticonderoga விலுள்ள பூங்கா ஒன்றில், மெலினாவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக, அந்தப் பகுதி மக்கள் ஏராளமானோர் செவ்வாயன்று கூடினார்கள்.

இரங்கல் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்த பிரிட்ஜெட் என்னும் பெண், இங்குதான் அவளது உயிர் பிரிந்தது, அப்படியானால் இதுதான் அவளது ஆன்மா இளைப்பாறும் இடம் என்கிறார்.

ஒரு குழந்தையின் மரணம் இப்படி இருக்கக்கூடாது என கண்ணீர் மல்கக் கூறும் அவர், மெலினா இனி எங்களில் ஒருத்தி என்கிறார்.